<u>DEPOSITON OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.6/2020 |
| Deposition of Witness | { PW3 |
| | { Prosecution |
| | { |
| Name | : கார்த்திகேயன் |
| Father's Name | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2024.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.3 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேட்டாங்காட்டில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். பட்டியல் சாட்சி 1 என் அப்பா அவர் இறந்துவிட்டார். அ.சா.1 என் அம்மா. அ.சா.2 என் பாட்டி. எனக்கு எதிரிகளை தெரியும். எங்களுக்கு சொந்தமாக கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் ச.எண்.299, 300/1-ல் 2.10 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தில் 6 கடைகளும், வீடும், கிணறும், மாட்டு கொட்டகையும் சுமார் 30 செண்டில் இருந்தது. 2007 ம் ஆண்டு என் அப்பா முருகேசன் என்பவரிடம் ரூ.3 லட்சம் கடை கட்டுவதற்காக வாங்கியிருந்தார். மேற்படி கடனுக்கு ரூ.2 வட்டி வீதம் பேசப்பட்டது. அந்த கடனை 3 வருடத்தில் திருப்பி செலுத்திவிடுவதாக கோபால் பெயருக்கு என் அப்பா பத்திரம் எழுதி கொடுத்தார். அந்த ஆவணத்தில் என் அப்பா, என் பாட்டி, என் சித்தப்பா ஆகியோர்

கையெழுத்து செய்தோம். அந்த ஆவணம் எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. பின்னர் 3 வருடம் முடிவதற்கு 3 மாதம் இருக்கும்போதே அசலையும் வட்டியையும் சேர்த்து திருப்பி செலுத்துவதற்காக முருகேசனை பார்த்து கேட்டோம். அப்போது அவர் பணத்தை வாங்க மறுத்ததுடன் எனக்கு இடம் தான் வேண்டும் என்றும், இடத்திற்காக தான் பணத்தை கொடுத்ததாக சொன்னார். இடத்தை தன்னுடைய பெயரில் கிரையம் செய்துவிட்டதாகவும் உங்களால் முடிந்ததை பார்த்து கொள்ளும் படியும் சொல்லிவிட்டார். நாங்கள் பணம் கொடுக்க சென்ற 3 நாட்கள் கழித்து காலை சுமார் 10.00 மணிக்கு தேதி, மாதம், வருடம் நினைவு இல்லை நான் வீட்டில் இருந்தோம் வீட்டில் அனைவரும் அப்போது இருந்தார்கள். அப்போது முருகேசன், மணி, கோபால் உட்பட சுமார் 50 நபர்கள் அங்கு வந்தார்கள். அவர்கள் கடைக்கு வாடகைக்கு இருந்தவர்களிடம் காலி செய்யும் படி சொன்னார்கள். ஆனால் வாடகைதாரர்கள் காலி செய்ய மறுத்துவிட்டார்கள். அப்போது 2 வாடகைதாரர்களை கடையில் இருந்து ரோட்டிற்கு இழுத்து வந்து அடித்து உதைத்தார்கள். பின்பு கடைக்குள் இருந்த பொருட்களுடன் சேர்த்து கடை கட்டிடத்தை பதிவு எண் இல்லாத JCB இயந்திரத்தின் மூலம் இடித்து தரைமட்டமாக்கிவிட்டார்கள். இது சம்பந்தமாக நாங்கள் தேவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். ஆனால் அவர்கள் புகாரை பெற்று கொள்ளவில்லை. பின்பு மறுநாள் அதே நபர்கள் கல் ஊன்றி முள் வேலி போட்டார்கள். அதை நானும் என் அம்மா, அப்பா, தம்பி ஆகியோர் சேர்ந்து தடுக்க முயன்ற போது முருகேசன் என் அம்மாவை காலால் எட்டி உதைத்தார், மணி என்பவர் கட்டையால் என் அம்மாவை அடித்தார். அப்போது முருகேசன் இடத்தை காலி செய்யவில்லை என்றால் மாலைக்குள் அனைவரையும் கொன்று புதைத்துவிடுவேன் என்று மிரட்டினார். இடம் தனக்கு சொந்தமானது என்றும் உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள் என்றார். மேற்படி சம்பவத்தை என்னுடைய நண்பர் ஒருவர் அவருடைய கைபேசியில் வீடியோ எடுத்தார். அதை மெம்மரிகார்டு மற்றும் சிடி-யில் பதிவு செய்து போலீசாரிடம் நான் தான் ஒப்படைத்தேன். சம்பவம் தொடர்பாக என் அப்பா சேலம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என் அப்பாவுடையது தான். புகார் சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- கார்த்திகேயன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.